11641



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)**

| | | |
|---|---|---|
| නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) | I, II | පැය තුනයි |
| நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | I, II | மூன்று மணித்தியாலம் |
| Drama and Theatre (Tamil) | I, II | *Three hours* |

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - මිනිත්තු 10 යි | வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |
| மேலதிக வாசிப்பு நேரம் | - 10 நிமிடங்கள் | |
| Additional Reading Time | - 10 minutes | |

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- ※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** கலைகள் ரசிக்கப்படுவதனை அடிப்படையாகக் கொண்டு ஓவியம், சிற்பம் என்பவற்றை
(1) ஆற்றுகைக் கலைகளாகக் கருதலாம்.
(2) செவிப்புலக் கலைகளாகக் கருதலாம்.
(3) கட்புல செவிப்புலக் கலைகளாகக் கருதலாம்.
(4) கட்புலக் கலைகளாகக் கருதலாம்.

**2.** 'போலச்செய்தலை அடிப்படையாகக் கொண்டு நாடகம் தோற்றம் பெற்றது' எனக் கூறியவர்
(1) தொம்சன் (2) அரிஸ்டோட்டில் (3) பேனாட்ஷா (4) ஷேக்ஸ்பியர்

**3.** பின்வருவனவற்றுள் கணப்பிரசன்னமான கலை வடிவங்களைக் கொண்ட தொகுதி
(1) நாடகம், சிற்பம், ஓவியம் (2) ஓவியம், சிற்பம், கட்டடம்
(3) நாடகம், கூத்து, பலே (4) இசை, நடனம், கைவினை

**4.** நாடக எழுத்துரு ஒன்றினைக் குறித்த வெளியில் ஆற்றுகையாகப் படைப்பாக்கம் செய்பவர்
(1) நெறியாளர் (2) நாடகாசிரியர்
(3) தயாரிப்பாளர் (4) மேடை முகாமையாளர்

**5.** அரங்கு தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் பொருத்தமற்றது
(1) ஆற்றுவோரும் பார்ப்போரும் சங்கமிப்பது
(2) திறந்தவெளிகளும் ஆற்றுகை வெளியாவது
(3) சமூகத்திலிருந்து புறவயமானதாக இருப்பது
(4) அரங்கவெளி ஆற்றுகையைத் தீர்மானிப்பது

**6.** நாடக ஆற்றுகையின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் பெரிதும் பங்கெடுப்பவர்
(1) நாடகாசிரியர் (2) பார்ப்போர்
(3) தயாரிப்பாளர் (4) மேடை முகாமையாளர்

**7.** பாத்திரத்தின் உளவியற் பண்பினை இனங்காண்பதற்கு உதவுபவை
(1) வயது, உடற்தோற்றம் (2) தொழில், அந்தஸ்து
(3) வேடஉடை, ஒப்பனை (4) பாத்திர மனநிலை, குணவியல்பு

**8.** அரங்கில் சூழமைவுக்கேற்ப பொருத்தமான அசைவுகளை வெளிப்படுத்தும் திறன்
(1) தொடர்பாடல் சார்ந்த திறன் (2) உளம் சார்ந்த திறன்
(3) செயலியக்கம் சார்ந்த திறன் (4) புதிதளித்தல் சார்ந்த திறன்

[பக். 2 ஐப் பார்க்க

**9.** பின்வருவனவற்றுள் தொழினுட்ப சாதனங்களோடு இணைந்ததாக வெளிப்படுத்தப்படும் படைப்புகளை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) சினிமா, வானொலி நாடகம், ஒபேறா
(2) சினிமா, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம்
(3) பலே, ஒபேறா, சினிமா
(4) ஒபேறா, கூத்து, தொலைக்காட்சி நாடகம்

**10.** 'கோடை கொடும்பனி மழைகுளிரை அஞ்சி...' எனும் பாடல் வரிகள் இடம்பெற்ற நாடகம்
(1) கோடை (2) ஆரொடுநோகேன் (3) புதியதொரு வீடு (4) எந்தையும் தாயும்

**11.** மரபுவழிக் கூத்தில் அண்ணாவியார், பிற்பாட்டுக்காரர், மத்தளம் இசைப்போர், ஏடு பார்ப்போர் ஆகியோரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பதம்
(1) சபையோர் (2) எடுத்துரைஞர் (3) கட்டியக்காரன் (4) கூத்தர்

**12.** 'வேதாளம் சொன்ன கதை' எனும் நாடகத்தின் ஆசிரியர்
(1) முருகையன் (2) மௌனகுரு (3) உருத்திரமூர்த்தி (4) அம்பி

**13.** வருடந்தோறும் கிறிஸ்தவர்களுடைய தவக்காலத்தில் பாஸ்காவை பேரரங்காக நிகழ்த்துகை செய்யும் நிறுவனம்
(1) அரங்கச் செயற்பாட்டுக் குழு (2) திருமறைக் கலாமன்றம்
(3) அரங்க ஆய்வுகூடம் (4) நாடக அரங்கக் கல்லூரி

**14.** கதை காணப்படாத போதிலும் பாத்திரங்களுக்கேற்ப வேறுபட்ட தாளங்கள் / தாளக்கட்டுக்களைக் கொண்டு நிகழ்த்தப்படும் கூத்து
(1) மகிடிக் கூத்து (2) காமன் கூத்து (3) பறைமேளக் கூத்து (4) காத்தவராயன் கூத்து

**15.** ஒருவரது இயல்பான புறத்தோற்றத்தில் இருந்து பிறிதொரு பாத்திரமாகப் பண்பு மாற்றம் செய்யத்தக்க வகையில் மேற்கொள்ளப்படும் ஒப்பனையாவது
(1) விசேட விளைவு ஒப்பனை (2) நேர் ஒப்பனை
(3) மோடிமைப் பாங்கான ஒப்பனை (4) பாத்திர ஒப்பனை

**16.** 'மானுடம் சுடரும் விடுதலை' என்பது
(1) மேடை நாடகம் (2) தெருவெளி அரங்கு (3) இசை நாடகம் (4) பாரம்பரிய அரங்கு

**17.** 'ஆரொடுநோகேன்' நாடகத்தில் காலமாற்றத்திற்கேற்ப பிள்ளைகளின் மனப்பாங்கு மாற்றமடையும் என்பதை விளங்கிக்கொண்ட பாத்திரம்
(1) இராசதுரை (2) ராஜ்குமார் (3) ரஞ்சித்குமார் (4) சரோஜினி

**18.** நாடகத்திற்கான அசைவியக்க வடிவாக்கங்களைத் திட்டமிடும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவை
(1) காலம், பொழுது, சூழல் (2) மோடி, தொனி, வீச்சு
(3) காலம், லயம், தாளப்பிரமாணம் (4) வர்ணம், செறிவு, தொனி

**19.** கண்ணகி வழக்குரையுடன் தொடர்புடைய கூத்து வடிவம்
(1) காமன் கூத்து (2) வசந்தன் கூத்து
(3) கோவலன் கூத்து (4) காத்தவராயன் கூத்து

**20.** பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களால் 'ஈழத்துத் தமிழ் நவீன நாடகத் தலைமுறை ஒன்றின் தாய்' என வர்ணிக்கப்பட்டவர்
(1) நா. சுந்தரலிங்கம் (2) குழந்தை ம. சண்முகலிங்கம்
(3) க. சிதம்பரநாதன் (4) சி. மௌனகுரு

**21.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - நடிகரது உடல் எத்தகைய சித்திரிப்பிற்கும் தயாராக இருத்தல்
B - வெவ்வேறு வீச்சுக்களில் சொல்லாடுதல்
C - பாத்திர உணர்ச்சிக்குள் பிரவேசித்தல்

மேற்படி கூற்றுகள் A, B, C குறித்து நிற்கும் சித்திரிப்புக்கள் முறையே
(1) குரல்வழி, உணர்ச்சிவழி, உடல்வழி (2) உடல்வழி, உணர்ச்சிவழி, குரல்வழி
(3) உணர்ச்சிவழி, குரல்வழி, உடல்வழி (4) உடல்வழி, குரல்வழி, உணர்ச்சிவழி

[பக். 3 ஐப் பார்க்க

**22.** பின்வருவனவற்றுள் இயற்கை மீதான கரிசனை, அன்பு, இரக்கம் போன்ற மானுடப் பண்புகளை வலியுறுத்தும் அரங்கப் பாடல்
(1) "அம்புலி மாமா அழகழ சொக்கா..." (2) "எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும்..."
(3) "சிறுநண்டு மணல் மீதில்..." (4) "என்னடி உந்தன் கோப்பியில்..."

**23.** பின்வருவனவற்றுள் ஈழத்தமிழருடைய பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் வெளிக்கொணர்ந்த நாடகமாக விளங்குவது
(1) ஆரொடுநோகேன் (2) புதியதொரு வீடு (3) மண்சுமந்தமேனியர் (4) எந்தையும் தாயும்

**24.** 'உடையார்மிடுக்கு', 'தவறான எண்ணம்' ஆகிய நாடகங்களை எழுதியவர்
(1) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (2) அ. தாசீசியஸ்
(3) குழந்தை ம. சண்முகலிங்கம் (4) கலையரசு சொர்ணலிங்கம்

**25.** கூத்து வடிவத்துள் சமகால முக்கியத்துவமுடைய கருப்பொருளை இணைத்துத் தயாரிக்கப்பட்ட படைப்பாக விளங்குவது
(1) சத்தியவான் சாவித்திரி (2) கர்ணன் போர்
(3) நொண்டி நாடகம் (4) கந்தன் கருணை

**26.** பின்வருவனவற்றுள் சிறுவர் நாடகமாக **அமையாதது**
(1) ஒற்றுமையின் சின்னம் (2) ஆர்கொலோ சதுரர்
(3) கூடி விளையாடு பாப்பா (4) கண்டறியாத கதை

**27.** ஈழத்து சமகாலப் பிரச்சினைகளை மேலைத்தேய அரங்கச் சிந்தனையாளர்களாகிய ஸ்ரனிஸ்லவஸ்கி மற்றும் பிறெஹ்ட் ஆகியோரது நடிப்பு நுட்பங்களையும் கையாண்டு விமர்சன ரீதியான அரங்க நடவடிக்கையை முன்னெடுத்தவர்
(1) க. கணபதிப்பிள்ளை (2) சொர்ணலிங்கம் (3) நா. சுந்தரலிங்கம் (4) பாலசிங்கம்

**28.** பின்வருவனவற்றுள் பரப்பொளி தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று
(1) அகல்கோண ஒளியைத் தருவது
(2) குறித்த ஓரிடத்தை முனைப்புறுத்திக் காட்டுவதற்காக அடர்த்தியான ஒளிக்கற்றைகளைக் குவித்துப் பாய்ச்சுவது
(3) மேடைவெளியைத் தெளிவாகப் பார்ப்பதற்கு பார்ப்போனுக்குத் துணைபுரிவது
(4) மேடை முழுமைக்குமாக ஒளிக்கற்றைகளைப் பாய்ச்சுவது

**29.** பாரம்பரியக் கூத்தினை நெறிப்படுத்துபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
(1) அண்ணாவியார் (2) தயாரிப்பாளர் (3) நெறியாளர் (4) இயக்குநர்

**30.** புதியதொரு வீடு நாடகம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் **பொருத்தமற்றது**
(1) கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவது.
(2) பா நாடக வடிவில் அமைந்தது.
(3) மஹாகவி து. உருத்திரமூர்த்தியால் எழுதப்பட்டது.
(4) கட்டிளமைப் பருவத்தினரது பிரச்சினைகளை வெளிப்படுத்துவது.

**31.** பயிற்சியின்போது தசைநார்களை அழுத்துவதன் மூலம் குரல் பிறப்பிக்கப்படும் இடங்களின் எண்ணிக்கையாகக் கருதப்படுவது
(1) 3 (2) 5 (3) 7 (4) 9

**32.** நாடக எழுத்துரு ஒன்று முழுமைபெறும் சந்தர்ப்பமாகக் கருதத்தக்கது
(1) வாசிப்பின்போது (2) ஒத்திகையின்போது
(3) ஆற்றுகையின்போது (4) பயிற்சியின்போது

**33.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - விவிலியப் பின்னணியைக் கதைப்பொருளாகக் கொண்டது.
B - திரௌபதி அம்மன் சடங்குடன் தொடர்புடையது.
C - ஆலய வீதியை அரங்காகக் கொண்டு பெருங்காட்சிப் பண்புடன் நிகழ்த்தப் பெறுவது.
மேற்படி கூற்றுகள் A, B, C என்பவற்றுடன் அதிகம் தொடர்புடைய தமிழ்ச்சடங்குகள் முறையே
(1) பாஸ்கா, வனவாசம், சூரன்போர் (2) வனவாசம், வேட்டைத்திருவிழா, பாஸ்கா
(3) சூரன்போர், வனவாசம், வேட்டைத்திருவிழா (4) பாஸ்கா, குளுர்த்தி, யம சங்காரம்

[பக். 4 ஐப் பார்க்க

11641

- மேல்வரும் உரையாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு **34** மற்றும் **35** ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - எனக்குப் பசிக்க இல்லை! சாப்பாடு வேண்டாம்
B - அப்பா! உங்களுக்கு ஒண்டும் கேக்குதில்லையே! நெடுகப் புத்தகத்துக்கை தலையைப் புதைச்சுப் போட்டுக் கிடவுங்கோ
C - என்னப்பா? என்ன அலுவல்?

**34.** மேற்படி உரையாடற் பகுதி இடம்பெற்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?
(1) மஹாகவி (2) அம்பி
(3) குழந்தை ம. சண்முகலிங்கம் (4) முருகையன்

**35.** மேற்படி உரையாடற் பகுதியுடன் தொடர்புடைய பாத்திரங்கள் A, B, C ஆகியன முறையே
(1) ஆரணி, சரோஜினி, இராஜதுரை (2) சங்கரி, சுபத்திரா, ரஞ்சித்குமார்
(3) அம்பிகை, ஆரணி, இராஜதுரை (4) அம்பிகை, சரோஜினி, இராஜதுரை

**36.** மேல்வரும் கூற்றுகளுள் உளப்பயிற்சி தொடர்பான **பொருத்தமற்ற** கூற்றாக அமைவது
(1) பாத்திரப் பண்பினை வெளிப்படுத்த உதவும்.
(2) உளத் தளர்வினை ஏற்படுத்த உதவும்.
(3) உடல், உளம் இறுக்கம் பெற வழிவகுக்கும்.
(4) பாத்திரமேற்று நடிக்க உதவும்.

**37.** 'மனிதர்கள் உயிர்க்க வேண்டும்...' எனும் அரங்கப் பாடல் வரிகளுக்குச் சொந்தமானவரும், படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகாசிரியருமாக விளங்குபவர்



(1) உருத்திரமூர்த்தி
(2) முருகையன்
(3) மௌனகுரு
(4) சுந்தரலிங்கம்

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவியின் பெயர் யாது?



(1) கீபோட்
(2) சுருதிப்பெட்டி
(3) பியானோ
(4) ஹார்மோனியம்

**39.** படத்தில் காணப்படும் அரங்கவெளி



(1) வட்டக்களரி
(2) படச்சட்ட அரங்கு
(3) குளோப் அரங்கு
(4) களத்துமேடு

**40.** சிங்கள நாட்டார் ஆற்றுகைகளுள் ஒன்றைக் குறித்து நிற்கும் படம்


(1)


(2)


(3)


(4)

❊ ❊

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)**

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) **I, II**
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) **I, II**
Drama and Theatre (Tamil) **I, II**

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II

※ **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கேட்பதன் அடியாக மனம் அரங்காகச் செயற்படும் நாடகவகை எது? (01 புள்ளி)

(ii) ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நிகழ்த்தப்பெறும் ஆற்றுகைப் பண்பு கொண்ட சடங்கு எது? (01 புள்ளி)

(iii) சொக்கரி ஆற்றுகை செய்யப்படும் அரங்கவெளி எவ்வாறழைக்கப்படும்? (01 புள்ளி)

(iv) அசைவுகளில் ஆக்கியல் அசைவு என்றால் என்ன? (01 புள்ளி)

(v) மேடை வெளியில் பாத்திரம் ஒன்றின் குறித்த உணர்ச்சியைச் சுட்டிக்காட்டும் ஒளிவிளக்கு எது? (01 புள்ளி)

(vi) 'தொன்று திகழ்ந்திடு இன்று இலங்கிடு...' எனும் நாடகப் பாடல் இடம்பெறும் நாடகம் எது? (01 புள்ளி)

(vii) 'வடபாங்கு' ஆற்றுகையில் காப்புப்பாடல் பாடப்படும் பாவினம் எது? (01 புள்ளி)

(viii) 'ஏகலைவன்' எனும் நாடகத்தை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(ix) நாடகப் பாத்திரம் ஒன்றின் உளவியற் பண்புகள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(x) நா. சுந்தரலிங்கம் எழுதிய நாடகங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**2.** (i) நாடகத்தின் மூலக்கூறுகள் **மூன்றினைப்** பட்டியற்படுத்துக. (03 புள்ளிகள்)

(ii) நாடகம் ஒன்றின் தனித்துவமானதும் சிறப்பானதுமான இயல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) 'நாடகம் ஒன்றைத் தயாரிக்கும்போது தயாரிப்பாளர் பணியும் முக்கியமானது' என்ற தொனிப்பொருளில் **ஐந்து** விடயங்களுக்குக் குறையாது கட்டுரை ஒன்றினை வரைக. (05 புள்ளிகள்)

**3.** (i) அரங்க விளையாட்டு என்றால் என்ன? (03 புள்ளிகள்)

(ii) அரங்க விளையாட்டுக்கள் **ஆறின்** பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) 'நடிகரின் நடிப்பாற்றலை விருத்தி செய்வதற்கு அரங்க விளையாட்டுக்கள் துணை நிற்கின்றன' இக்கூற்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**4.** 'துணைக்கலைகள் நாடகத்தை மெருகூட்டப் பயன்படுகின்றன'

(i) ஒப்பனை என்றால் என்னவென்பதை எடுத்துக்கூறி, நாடகத்தில் ஒப்பனையின் பயன்பாடுகள் **மூன்றினைத்** தருக. (04 புள்ளிகள்)

(ii) நாடகமொன்றில் அசைவியக்க வடிவாக்கம் செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) 'நாடகமொன்றில் இசையின் நோக்கங்கள்' என்ற தலைப்பிற்கேற்றவாறு நான்கு கருத்துக்களை முன்வைக்குக. (04 புள்ளிகள்)

**5.** பின்வரும் அரங்கவியலாளர்கள் ஈழத்தமிழ் அரங்கிற்கு ஆற்றிவரும் பணிகள் பற்றி விளக்குக.

(i) சி. மௌனகுரு (04 புள்ளிகள்)

(ii) குழந்தை ம. சண்முகலிங்கம் (04 புள்ளிகள்)

(iii) க. சிதம்பரநாதன் (04 புள்ளிகள்)

**6.** (i) ஆரொடுநோகேன் நாடகத்தில் வரும் 'சுபத்திரா' மற்றும் புதியதொரு வீடு நாடகத்தில் வரும் 'மாசிலன்' ஆகிய பாத்திரங்களின் பாத்திரச் சித்திரிப்புப் பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) மேற்குறிப்பிட்ட இரண்டு நாடகங்களிலும் காணப்படும் பிரதான கருக்களை இனங்கண்டு எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) ஆரொடுநோகேன் நாடகத்தை படச்சட்ட மேடையில் ஆற்றுகை செய்யும்போது நாடக இறுதிக் காட்சிக்குரிய காட்சிவிதானிப்பை எவ்வாறு திட்டமிடுவீர் என்பதை விவரிக்குக. (04 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் யாதாயினும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) குளுர்த்தி

(ii) உடற்தளர்வுப் பயிற்சி

(iii) தென்பாங்கு

(iv) பொட்டொளி

(v) நாடக நயப்பும் நாடக விமர்சனமும்

(04 × 3 = 12 புள்ளிகள்)

* * *